# மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியம் - 2011

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2011 நவம்பர் 01 ஆம் திகதி முதல் நிதியம் சனாதிபதி செயலகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட 2011 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் அங்கத்தவராக கூட்டுறவு மற்றும் உள்ளக வியாபார அமைச்சுச் செயலாளராலேயே சான்றுறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இவ்வாறே 2011 ஆம் ஆண்டிற்கான வரைவு நிதிக்கூற்றுக்கள் 2012 பெப்ரவரி 29 ஆம் திகதியே கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2012 ஏப்ரல் 27 ஆம் திகதி மீளதிருத்தப்பட்ட வரைவு நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

#### 1.2.2 கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை கணக்கீட்டு நியமம் இல 26 இன் பிரகாரம் நிதியத்திற்கு முழுமையான உரித்துடைய வரையறுக்கப்பட்ட நெஷனல் வெல்த் கூட்டுத்தாபன நிறுவகம் ஒருங்கிணைக்கப்பட்டு ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2003 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை நிதிக்கூற்றுக்களை ஒருங்கிணைப்பதற்கு நிதியம் செயற்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2009 ஆம் ஆண்டின் போது கூட்டுறவு மற்றும் உள்ளக வியாபார அமைச்சினால் நடாத்தப்பட்டிருந்த மஹபொல விற்பனைக் கண்காட்சியின் மூலம் கிடைக்க வேண்டிய ரூபா 3,270,082 தொகையான மிகை வருமானம் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இலங்கை தகவல் தொழிநுட்ப நிறுவகத்தில் (SLIIT) முதலீடு செய்யப்பட்டிருந்த மொத்த பணம் ரூபா 461,207,812 ஆன போதிலும் தகவல் தொழிநுட்ப நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களில் இது ரூபா 373,577,393 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 87,630,420 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. எவ்வாறெனினும், இவ் வேறுபாடு நீண்டகாலமாக பதிவழிக்கப்படுவது குறிப்பு இல. 01 இல் வெளிப்படுத்தப்பட்டது.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) நி.பி. 264 | பெறுனரால் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டமையை உறுதிப்படுத்தும் பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் ரூபா 49,414,250 தொகையான புலமைப்பரிசிற் கொடுப்பனவுகள் தொடர்பாக அத் தேவைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நி.பி. 396(ஈ) | நிதியத்தால் வழங்கப்பட்ட எனினும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிராத ரூபா 2,628,700 பெறுமதியான 03 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முன்னைய ஆண்டிற்கான சீராக்கங்கள் மற்றும் நட்டங்கள் மற்றும் பதிவழிப்புகளுக்கு முன்னர் நிதியத்தின் மிகைகள் ரூபா 421,249,846 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான சீராக்கங்கள் மற்றும் நட்டங்கள் மற்றும் பதிவழிப்புகளுக்கு முன்னர் முன்னைய ஆண்டின் மிகை ரூபா 435,069,815 ஆனமையால் ரூபா 13,819,969 ஆல் நிதி விளைவுகளில் குறைவொன்று தென்பட்டது. இதற்காக 2011 ஆம் ஆண்டின் போது பங்கிலாப வருமானம் முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நிதியத்தின் மூலம் புலமைப்பரிசில்கள் வழங்கல் தொடர்பான தகவல்கள் மற்றும் சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | பல்கலைக்கழகங் களுக்கு வழங்கப்பட்ட புலமைப்பரிசில்க ளின் எண்ணிக்கை | பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்க ப்பட்ட மாணவர்களின் சதவீதமாக வழங்கப்பட்ட புலமைப் பரிசில்களின் எண்ணிக்கை | தொழில்நுட்ப கல்லூரிகளுக்கும் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்ட புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட புலமைப்பரிசில்களின் மொத்த எண்ணிக்கை | புலமைப்பரிசில்கள் வழங்கலுக்கான ஏற்பட்ட செலவினம் | புலமைப்பரிசில் வழங்கும் வைபவங்களுக் கான செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | % | | | ரூபா | ரூபா |
| 1999/2000 | 11,324 | 5,958 | 52.6 | 550 | 6,508 | 229,443,550 | 5,118,665 |
| 2000/2001 | 11,717 | 6,275 | 53.5 | 601 | 6,876 | 245,651,650 | 2,982,856 |
| 2001/2002 | 11,380 | 6,206 | 54.5 | 417 | 6,623 | 362,024,850 | 3,690,075 |
| 2002/2003 | 23,568 | 12,246 | 52.0 | 522 | 12,768 | 379,473,500 | 4,622,591 |
| 2003/2004 | 12,623 | 8,147 | 64.5 | 550 | 8,697 | 437,707,100 | 785,517 |
| 2004/2005 | 13.653 | 9,000 | 65.9 | 847 | 9,847 | 487,929,950 | 516,476 |
| 2005/2006 | 15.478 | 8,009 | 51.7 | 1,335 | 9,344 | 644,682,550 | 941,490 |
| 2006/2007 | 15,996 | 7,799 | 48.8 | 1,045 | 8,844 | 717,665,900 | 3,050,987 |
| 2007/2008 | 18,714 | 9,500 | 50.7 | 1,663 | 11,163 | 711,135,000 | 1,328,963 |
| 2008/2009 | 19,340 | 10,000 | 52.0 | 1,500 | 11,500 | 695,747,550 | 2,057,249 |
| 2009/2010 | 20,111 | 10,000 | 49.72 | 1,564 | 12,574 | 763,746,500 | 2,035,922 |
| 2010/2011 | 20,274 | 10,300 | 50.80 | 1,500 | 11,800 | 694,519,600 | 2,876,999 |

## 3.2 செயற்பாட்டுத் திறமையின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

### (அ) புலமைப்பரிசில் வழங்கல்

2011 ஆம் ஆண்டின் போது நிதியத்திற்கு வழங்கப்பட்ட புலமைப்பரிசில்களும் அதற்கான கொடுப்பனவுகள் தொடர்பான விபரம் பின்வருமாறாகக் காணப்பட்டது.

| கல்வியாண்டு | 2007/2008 | 2008/2009 | 2009/2010 |
|---|---|---|---|
| பல்கலைக்கழக அனுமதியைப் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை | 18,714 | 19,340 | 20,111 |
| நிதியத்தின் பொறுப்பு சபையால் பல்கலைக்கழகங்களுக்காக ஒதுக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை | 9,500 | 10,000 | 10,000 |
| வழங்கப்பட்ட புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை | 8,787 | 9,006 | 8,868 |

இது தொடர்பாகவும் இதற்குரிய கொடுப்பனவுகள் தொடர்பாகவும் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நிதியத்தால் புலமைப்பரிசில் பெறுனர்களுக்கு பணம் செலுத்தப்படுகையில் ஒவ்வொரு மாதத்திற்காகவும் குறித்த இறுதித் திகதி தீர்மானிக்கப்பட்டு கொடுப்பனவை மேற்கொள்வதற்கு பல்கலைக்கழகங்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவை முறையாக செயற்படுத்தப்பட்டிராமையால் தவணைப்பணக் கொடுப்பனவின் பின்னர் எஞ்சியுள்ள பணம் தாமதமின்றி மீளப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தெரிவுச் செவ்வையின் பிரகாரம், 05 பல்கலைக்கழகங்களின் புலமைப்பரிசின் தவணைக் கொடுப்பனவு 01 மாதம் முதல் 10 மாதங்கள் வரையான காலமாக நிலுவையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகள்**

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(I) 2011 யூன் 21 ஆம் திகதியளவில் வகுப்பறைகளுடன் கேட்போர் கூடக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு மாலம்பே ஆண்கள் பாடசாலைக்கு ரூபா 4,366,838 வழங்கப்பட்டிருந்ததுடன் 2011 யூன் 21 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக ஆய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2011 சனவரி 18 ஆம் திகதி கல்வி அமைச்சிற்கும் தனியார் ஒப்பந்தக்காரருக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் இரண்டாம் நிலைக் கல்வி மற்றும் நவீனமயமாக்கல் செயற்திட்டத்தின் மூலம் நிதியத்தைப் பெற்று கட்டிடத்தின் I ஆம் கட்ட நிர்மாணிப்பு நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டன. உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்ட தொகை ரூபா 4,022,269 (பெறுமதி சேர் வரி அற்ற) ஆகக் காணப்பட்டது. எனினும், ஈடீ/07/99/07/12/10 ஆம் இலக்க 2010 ஒக்டோபர் 28 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம், மேற்குறித்த கட்டிடத்தின் I ஆம் கட்ட நிர்மாண நடவடிக்கைகளுக்காக மஹபொல நிதியத்தில் இருந்தும் ரூபா 4,366,838 தொகை பயன்படுத்தப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மஹபொல நிதியத்தில் இருந்து அந் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) 2010 திசெம்பர் 08 ஆம் திகதி மேற்குறித்த ரூபா 4,366,838 தொகையான பணம் கல்வி அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் இது வைப்புக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. இத் தொகை அது வரையிலும் வேறு பாடசாலைகளின் நிர்மாண வேலைகளுக்காகச் செலுத்துவதற்காக இருந்த ரூபா 4,193,629 தொகையான நிலுவைப் பணக் கொடுப்பனவிற்காகப் பயன்படுத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது.

(iii) 2010 பெப்ரவரி 06 ஆம் திகதி இவ்விடத்தில் காணப்பட்ட பழைய கட்டிடத்தை இடித்தகற்றி வகுப்பறைகளில் இருந்த மாணவர்கள் தற்காலிகக் கட்டிடமொன்றில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர். புதிய கட்டிடம் பூர்த்தி செய்யப்பட்டு மாணவர்கள் அக் கட்டிடத்திற்கு மாற்றப்படுவது உடனடியாகச் செயற்படுத்தப்பட வேண்டிய போதிலும் 2011 யூன் மாதமளவில் நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தன.

II. ஹங்வல்ல ராஜசிங்ஹ வித்தியாலய மைதானத்தை நவீனமயமாக்கவதற்காக ரூபா 22,317,500 தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 50/05 ஆம் இலக்க பொறுப்புச் சபைப் பத்திரத்தின் மூலம் இதற்காக ரூபா 20 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் பின்னர் இத் தொகை ரூபா 25 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. 2010 திசெம்பர் 31 வரை இதில் ரூபா 24,046,747 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2011 யூன் 20 வரை மேற்குறித்த மலசலகூடம் மற்றும் குளியலறை முறைமையின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டு இல. 02 இன் பிரகாரம், நிலத்தைத் தயார்படுத்துவதற்காக ரூபா 13,247,500 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் இச் செயற்பாடுகள் முறையாக மேற்கொள்ளப்பட்டிராமையால் மைதானத்திற்கு பாரிய சேதம் ஏற்பட்டிருந்த காரணத்தினால் அப் பாடசாலையின் உள்ளக விளையாட்டு நடவடிக்கைகள் நடாத்தப்படுவதில் தடங்கல் ஏற்பட்டிருந்தது. ஆகையால் ஏனைய பயிற்சி நடவடிக்கைகளுக்காக மேலதிகக் கிரயத்தை மேற்கொள்ள நேர்ந்திருந்தமை போன்ற பாதகமான நிலைகளுக்கு பாடசாலை முகம் கொடுக்க நேர்ந்திருந்தது.

## 3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

நிதியத்தினால் 2008 ஏப்ரல் 07 ஆம் திகதி முதல் 04 வருட காலத்திற்காக ஒரு பிரதிக்கு ரூபா 2.30 படி (பெறுமதி சேர் வரியுடன்) ஒரு மாதத்திற்கு 3,000 பிரதிகள் பெற்றுக்கொள்ளப்படும் ஒப்பந்தத்தில் பல்நோக்கு கணனி அச்சீட்டு இயந்திரம் ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் இதற்காக 2011 ஆகஸ்ட் வரை செலுத்தப்பட்டிருந்த மொத்தத் தொகை ரூபா 364,369 ஆகக் காணப்பட்டது. உடன்படிக்கையின் பிரகாரம் மாதாந்தம் ஆகக் குறைந்த பிரதிகள் எண்ணிக்கையைப் பெற்றுக்கொள்வதற்காக முடியாதிருந்தமையால் பெற்றுக்கொள்ளப்பட்டிராத 6,144 பிரதிகளுக்காக ரூபா 14,142 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 39/03 ஆம் இலக்க 2002 மே 13 ஆம் திகதிய நம்பிக்கை பொறுப்புச் சபைப் பத்திரத்தின் பிரகாரம், நிதியத்தின் மிகைப் பணத்தை போட்டி நிதிச் சந்தையில் முதலீடு செய்வதன் மூலம் உயரிய உழைப்பைப் பெறக்கூடிய வகையில் நிதியத்தை முகாமைத்துவம் செய்யும் எதிர்பார்ப்பில் ரூபா 200,000,000 தொகையான அடிப்படை மூலதனப் பங்களிப்பின் மூலம் கம்பனி ஒன்று 2003 மார்ச் 23 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.3 இன் பிரகாரம் இப் பண முதலீட்டிற்காக நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், நிதியத்தினால் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முகாமைத்துவத்திற்காக கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த மொத்தத் தொகை ரூபா 5,125,204,995 ஆகக் காணப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நிதியம் ஈடுபடுத்தப்பட்ட ரூபா 200,000,000 தொகையான அடிப்படை மூலதனத்திற்கு 2003 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரை அதாவது 05 ஆண்டுகளுக்காக எதுவித பங்கிலாபமும் பெறப்பட்டிராததுடன் 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளுக்காக பங்கிலாபமாக முறையே ரூபா 5 மில்லியன், ரூபா 4.8 மில்லியன்

தொகையும் ரூபா 60.5 மில்லியன் தொகைகள் பெறப்பட்டிருந்தன. 2011 ஆம் ஆண்டின் நம்பிக்கைப் பொறுப்புச் சபை பத்திர இல. 52/09 இன் பிரகாரம் 2011 ஒக்டோபர் 31 இல் உள்ளவாறு மேற்குறித்த கம்பனியின் பங்கிலாபம் ரூபா 74,161,271 ஆன போதிலும் 2011 ஆம் ஆண்டிற்காக நிதியத்திற்கு எவ்வித பங்கிலாபமும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்திடம் இருந்த ரூபா 5,125,204,995 நிதியம் மேற்குறித்த கம்பனியில் முதலீடு செய்யப்படுவதன் மூலம் ரூபா 508,742,060 தொகையான வட்டி வருமானம் உழைக்கப்பட்டிருந்த போதிலும் இதில் ரூபா 7,911,887 தொகை உரிய கம்பனியின் சொத்து முகாமைத்துவக் கட்டணம் மற்றும் நம்பிக்கைப் பொறுப்புக் கட்டணமாக ரூபா 9,653,445 தொகை கழிக்கப்பட்டதை அடுத்து ரூபா 499,088,615 தொகை நிதியத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. நிதியம் வரியில் இருந்து விடுவிக்கப்பட்ட நிறுவனமாக இருந்தமையால் மேற்குறித்த பணம் நேரடியாக முதலீடு செய்யப்பட்டிருப்பின் ரூபா 9,653,445 தொகையான பணத்தை சேமிக்கக்கூடியதாக இருந்திருக்கும்.

(iii) 2004 ஆம் ஆண்டின் பின்னர் மேற்குறித்த கம்பனி செயற்பாடற்ற நிலையை அடைந்திருந்ததுடன் போட்டியின்றி சந்தையில் செயற்பட்டிருந்தமையால் போட்டி வட்டி வீதங்களைப் பார்க்கிலும் குறைவான வட்டியை நிதியம் பெற்றிருந்தது.

(ஆ) <u>இலங்கை தகவல் தொழிநுட்ப நிறுவனம்</u>

(i) மஹபொல பொறுப்பாண்மை சபை மற்றும் இலங்கை தகவல் தொழிநுட்ப நிறுவனத்திற்கிடையே 2005 நவம்பர் 14 ஆம் திகதி ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் 4(பீ) ஆம் பிரிவின் பிரகாரம் மஹபொல நிதியச் செயலாளர், பிரதான கணக்காளர் மற்றும் மேலும் கல்வி மற்றும் தொழிற்தகமைகள் பெற்றுள்ள மூன்று உத்தியோகத்தர்கள், இலங்கை தகவல் தொழிநுட்ப நிறுவனத்தில் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட வேண்டிய போதிலும் நிதியத்தில் இருந்து இரு அங்கத்தவர்களும் நிதியத்திற்கு வெளியிலிருந்து மூன்று அங்கத்தவர்களுமாக ஐந்து அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ii) உடன்படிக்கையின் 5(அ) (ii) ஆம் பிரிவின் பிரகாரம், இலங்கை தகவல் தொழிநுட்ப பட்டப்படிப்பிற்காக 25 புலமைப் பரிசுகளை நிதியத்தின் பெயரில் வழங்குவதற்கு செயற்பட வேண்டிய போதிலும் இது வரையில் புலமைப்பரிசில்களை வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) உடன்படிக்கையின் 4(ஓ) பிரிவின் பிரகாரம், நிதியத்தினால் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த காணி இலங்கை தகவல் தொழிநுட்ப நிறுவனத்தினால் (SLIIT) பத்து ஆண்டுகளில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியதுடன், அவ்வாறு பயன்படுத்தப்படவில்லையாயின் அக்காணியை வேறு செயற்திட்டத்திற்கு பயன்படுத்துவதற்கு நிதியத்திற்கு உரிமை இருந்த போதிலும் மேற்குறித்த பாத்தாண்டு கால எல்லையில் 05 ஆண்டுகளுக்கு மேல் கடந்திருந்த போதிலும், 2012 திசெம்பர் 18 ஆம் திகதி வரை அபிவிருத்திச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 பதவியணி நிர்வாகம்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தின் பதவியணி பின்வருமாறாகக் காணப்பட்டது.

| பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| நிறைவேற்று | 05 | 04 | 01 |
| நிறைவேற்றுத்தரமற்ற | 11 | 04 | 07 |
| கனிஷ்ட | 03 | 02 | 01 |
| | 19 | 10 | 09 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கை 19 ஆகக் காண்பிக்கப்பட்ட போதிலும் இதற்காக 12 ஆம் இலக்க 2003 யூன் 02 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பிரிவின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதியத்தின் நிறைவேற்றுத்தரத்தின் 03 பதவிகள் 60 வயதுக்கு மேற்பட்ட ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த ஒரு உத்தியோகத்தராலும் பதில் கடமை நியமனங்கள் 02 இன் மூலமும் நிரப்பப்பட்டிருந்தன.

(இ) நிதியத்தின் பிரதான நிறைவேற்றுனரான பணிப்பாளர் அவர்களும் 60 வயதிற்கு மேற்பட்ட மற்றும் மாதாந்தம் ரூபா 12,000 தொகையான பதில் கடமைப் படிப்பணத்தைப் பெற்றுக்கொள்ளும் உத்தியோகத்தர் ஆவார்.

(ஈ) கனிஷ்ட சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த இரு உத்தியோகத்தர்களும் அமைய அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் அந்த ஊழியர்களுக்கும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தருக்கும் 12 ஆம் இலக்க 2003 யூன் 02 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.10 ஆம் பிரிவின் பிரகாரம் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது நிதியத்தின் தலைவருக்கு அறிக்கையிடப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதியத்தின் முகாமை
(இ) புலமைப்பரிசில்
(ஈ) பாடசாலை அபிவிருத்தி நிதியம்
(உ) பதவியணி